DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
CC. No.1277/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மணிமொழி | க-பெ | பிரபு |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 37/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து சார்பு ஆய்வாளராக சிவகங்கை Q பிரிவு குற்ற புலனாய்வில் பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் 03.06.2019 அன்று நிலைய பணியில் இருந்த போது காரைக்குடி மானகிரி அப்போலோ மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த காயம்பட்ட நபர் தைனீஸ் மேரி என்பவரை பார்த்த போது அவர் பேச இயலாத நிலையில் இருந்ததால் அவரது உறவினர் விமல் என்பவரிடம் விசாரணை செய்த போது அவர் கொடுத்த மனுவை பெற்று நிலையம் வந்து குற்ற எண்.191/2019 இதச பிரிவுகள் 279, 337 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4**. பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் சம்பவயிடம் சென்று 04.06.2019 அன்று மதியம் 12.00 மணியளவில் சம்பவயிட சாட்சிகள் மாணிக்கம் மற்றும் அழகுராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, பார்வை மகஜர் அ.சா.ஆ.6**.

பின்னர் 06.06.2019 அன்று மேற்படி சிகிச்சையில் இருந்த தைனீஸ் மேரி என்பவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்ட காரணத்தால் சட்ட பிரிவு 304(A) ஆக மாற்றம் செய்து சட்ட பிரிவு மாற்று அறிக்கை கனம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன் **சட்ட பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.7**. பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் ஆத்மநாதன் என்பவர் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

மருத்துவமனை சென்று வாக்குமூலம் பெற்ற நாள் 04.06.2019, மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தது 03.06.2019 என்றால் சரிதான். மருத்துவமனையில் காயம்பட்ட நபரிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். அவரது மருமகளிடம் தான் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலம் அடிப்படையில் தான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்திலும் எதிரியின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கேள்விப்பட்ட சாட்சி என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 நபர்கள் அ.சா.1 க்கு தெரிந்த நபர்கள் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.17 10:44:50 +0530